**நாணயச் சபை**

**இலங்கை மத்திய வங்கி**

**2021 மாச்சு 10** **சுற்றறிக்கை** **2021இன் 03ஆம் இலக்கம்**

---

**பயணிகள் போக்குவரத்துத் துறையிலுள்ள வியாபாரங்களினாலும் தனிப்பட்டவர்களினாலும் பெறப்பட்ட குத்தகை வசதிகளுக்கான சலுகைகள்**

தற்பொழுது காணப்படும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக பயணிகள் போக்குவரத்துத் துறையில் ஈடுபட்டுள்ள வியாபாரங்களினாலும் தனிப்பட்டவர்களினாலும் எதிர்நோக்கப்படும் சவால்களை ஈடுசெய்யும் நோக்குடன், இலங்கை மத்திய வங்கி உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் (இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் எனக் குறிப்பிடப்படும்) பயணிகள் போக்குவரத்துப் பணிகளில் (இதனகத்துப் பின்னர் திட்டம் எனக் குறிப்பிடப்படும்) ஈடுபட்டுள்ள கொவிட்-19இனால் பாதிக்கப்பட்டிருக்கும் வியாபாரங்களினாலும் தனிப்பட்டவர்களினாலும் பெறப்பட்ட குத்தகை வசதிகளுக்காக கீழே குறிப்பிடப்பட்டவாறு 2021 ஏப்பிறல் 1ஆம் நாளிலிருந்து ஆறுமாத காலப்பகுதிக்கு சலுகைகளை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறது.

இதற்கமைய, இச்சுற்றறிக்கையானது, அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கிடையேயும் நிலையானதொரு தன்மையினை ஏற்படுத்தும் விதத்தில் திட்டத்திற்குக் காத்திரமான தன்மையினை வழங்குவதற்காக விடுக்கப்படுகிறது.

**1. குத்தகைத் தவணைகளைப் பிற்போடும் காலம்**

1.1 உரிமம்பெற்ற வங்கிகள் தகைமையுடைய கடன்பாட்டாளர்களினால் எதிர்நோக்கப்படும் நிதியியல் இடர்ப்பாடுகளைப் பரிசீலனையில் கொண்டு 2021 ஏப்பிறல் 01 இலிருந்து ஆரம்பிக்கும் விதத்தில் 6 மாத காலத்தினை விஞ்சாததொரு காலப்பகுதிக்கு அல்லது ஏற்புடைத்தானவிடத்து குறைவானதொரு காலப்பகுதிக்குப் பிற்போடுதல் வேண்டும்.

1.2 குத்தகை தவணையினை (மூலதனம் மற்றும் வட்டி) பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளரின் கோரிக்கை மீது பிற்போடலாம்.

**2. விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி**

2.1 தகைமையுடைய கடன்பாட்டாளர்கள் 2021 ஏப்பிறல் 19 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ குத்தகை தவணைகளை பிற்போடுவதற்கான கோரிக்கையினை எழுத்து மூலமோ அல்லது இலத்திரனியல் முறை மூலமோ விடுத்தல் வேண்டும். உரிமம்பெற்ற வங்கிகள் விரைவான முறையில் சலுகைகள், விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி, விண்ணப்பங்களின் படிவம் போன்றவற்றை தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கு அச்சிடப்பட்ட வடிவில் அத்துடன் மின்னஞ்சல் மற்றும் குறுந்தகவல் உட்பட இலத்திரனியல் முறையில் அறிவித்தல் வேண்டும்.

2.2 2021 ஏப்பிறல் 19ஆம் திகதிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் தொடர்பில், அத்தகைய கோரிக்கையினைச் செய்வதில் காணப்பட்ட தாமதத்திற்கான காரணங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருப்பின் உரிமம்பெற்ற வங்கிகள் அதனை ஏற்றுக்கொள்ளலாம்.

**3. தகைமையுடைய கடன்பாட்டாளர்கள்**

3.1 பொதுமக்கள் பயணிகள் போக்குவரத்தினை வழங்குவதில் ஈடுபட்டுள்ள வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்கள், பாடசாலைப் போக்குவரத்துப் பணிகள், அலுவலகப் போக்குவரத்துப் பணிகள், முச்சில்லு வண்டிகள் உட்பட ரக்சி போன்ற தனியார் பயணிகள் போக்குவரத்துக்கள் மற்றும் சுற்றுலாத்துறைக்கு பயணிகள் போக்குவரத்துப் பணிகளை வழங்குபவர்கள் ஆகியோர்.

3.2 உரிமம்பெற்ற வங்கிகள் மேலே 3.1இல் குறிப்பிடப்பட்ட துறைகளுக்குப் பயணிகள் போக்குவரத்தினை வழங்குவதற்கு ஊர்திகள் பயன்படுத்தப்பட்டமையினை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு தகைமையுடைய கடன்பாட்டாளர்களைக் கேட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

## 4. தகைமையுடைய கொடுகடன் வசதிகள்

மேலேயுள்ள பந்தி 3இன் கீழ் குறிப்பிடப்பட்ட தகைமையுடைய கடன்பாட்டாளர்களினால் பெறப்பட்ட 2021 மாச்சு 31இல் உள்ளவாறான சட்ட இசைவுத்தாமதத்தின் கீழான குத்தகை வசதிகள் உட்பட செயற்படுகின்ற குத்தகை வசதிகள்.

## 5. சலுகைகளை சீரமைத்தல்

5.1 குத்தகை வசதிகளின் தற்போதுள்ள காலப்பகுதியை நீடித்தல்

(அ) உரிமம்பெற்ற வங்கிகள் பிற்போடுவதற்கு தகைமையுடைய குத்தகை வசதிகளின் தற்போதுள்ள காலத்தினை, தொடர்பான பிற்போடல் காலத்தினால் நீடிக்கலாம்.

(ஆ) உரிமம்பெற்ற வங்கிகள் பிற்போடப்பட்ட காலப்பகுதிக்குள் செலுத்தப்பட வேண்டிய குத்தகை தவணைப் பணத்தின் மீது மாத்திரம், 2021 ஏப்பிறல் 01 அன்று கிடைக்கத்தக்க 364 நாட்கள் திறைசேரி உண்டியலுக்கான மிகப் பிந்திய ஏல வீதத்துடன் ஆண்டிற்கு 1 சதவீதத்தினை கூட்டிய வீதத்தினை விஞ்சாத வீதத்தில் வட்டி வீதமொன்றினை விதிக்கலாம்.

(இ) அத்தகைய வட்டி வீதத்தினை இக்காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டிய ஏற்கனவேயுள்ள குத்தகையுடன் சேர்த்து 2023 ஏப்பிறலிலிருந்து அறவிட்டுக் கொள்ளுதல் வேண்டும். குத்தகை வசதியின் எஞ்சியுள்ள காலம் 2023 ஏப்பிறலுக்கு முன்னர் முடிவடைகின்ற விடயத்தினைப் பொறுத்தவரை, நிதியியல் நிறுவனங்கள் குத்தகை வசதியின் எஞ்சியுள்ள காலம் நிறைவடையும் போது அத்தகைய வட்டியினை அறவிட்டுக் கொள்ளத் தொடங்கலாம்.

(ஈ) தற்போதுள்ள குத்தகை வசதியின் எஞ்சியுள்ள காலம் முடிவடைந்ததும், கடன்பாட்டாளர்கள் மேலே பந்தி 5.1(அ)இல் குறிப்பிடப்பட்ட பிற்போடப்பட்ட தவணைகளின் மீள்கொடுப்பனவுகளை ஆரம்பித்தல் வேண்டும்.

5.2 சட்ட இசைவுத்தாமதத்தின் போது செலுத்தப்பட வேண்டிய தொகையினை அறவிடல்

(அ) பள்ளிக்கூடங்கள் (அநேகமான போக்குவரத்து பணிகளை வழங்குவோர் மாதாந்த கொடுப்பனவுகளை தடங்கலின்றி தொடர்ச்சியாகப் பெற்றுக்கொள்கின்றனர்), அலுவலகங்கள், விமானநிலையம் போன்றன மீளத்திறக்கப்பட்டமையின் காரணமாக அரச மற்றும் தனியாள் போக்குவரத்து படிப்படியாக வழமைக்குத் திரும்புகின்றமை, உரிமம்பெற்ற வங்கிகள் மீதான படுகடன் சட்ட இசைவுத்தாமதம் நீடிக்கப்பட்டமையின் சாதகமான தாக்கம் மற்றும் தற்போது இடம்பெற்று வருகின்ற தடுப்பு மருந்து நிகழ்ச்சித்திட்டம் என்பனவற்றினைப் பரிசீலனையில் கொண்டு, 2019 ஏப்பிறல் 1 இலிருந்து 2020 மாச்சு 31 வரையிலும் 2020 ஏப்பிறல் 01 இலிருந்து 2020 செத்தெம்பர் 30 வரையிலும் 2020 ஒத்தோபர் 01 இலிருந்து 2021 மாச்சு 31 வரையிலுமான காலப்பகுதியில் (இதனகத்துப் பின்னர் சட்ட இசைவுத்தாமதம் எனக் குறிப்பிடப்படும்) வழங்கப்பட்ட சட்ட இசைவுத்தாமதம் தொடர்பில் செலுத்தப்பட வேண்டிய தவணைப் பணத்தினை, ஏற்புடைத்தான விதத்தில் மேலே பந்தி 5.1(அ)இல் குறிப்பிடப்பட்ட தற்போதுள்ள குத்தகை வசதியின் பிற்போடப்பட்ட காலப்பகுதியில் அறவிடத் தொடங்குதல் வேண்டும்.

(ஆ) தற்போதுள்ள குத்தகை வசதியின் பிற்போடப்பட்ட காலம் (மேலேயுள்ள பந்தி 5.1(அ) இல் குறிப்பிடப்பட்டவை) முடிவடைந்ததும் சட்ட இசைவுத்தாமதத்தின் மீது செலுத்தப்பட வேண்டிய தவணைப் பணத்தின் மீள்கொடுப்பனவினை தற்போதுள்ள குத்தகை வசதியின் பிற்போடப்பட்ட காலம் உட்பட எஞ்சியுள்ள காலப்பகுதி வரை பிற்போடப்படுதல் வேண்டும்.

(இ) சட்ட இசைவுதாமதத்தின் மீது செலுத்தப்பட வேண்டிய தவணைப் பணத்தின் அத்தகைய பிற்போடப்பட்ட காலப்பகுதிக்காக, 2021 ஏப்பிறல் 01ஆம் திகதியில் கிடைக்கத்தக்கதாகவுள்ள 364 நாள் திறைசேரி உண்டியல்களுக்கான பிந்திய ஏல வீதத்துடன் ஆண்டொன்றிற்கு 1 சதவீதத்தினை கூட்டிய வீதத்தினை விஞ்சாததொரு வீதத்தில் வட்டியை ஒன்றுசேர்க்கலாம்.

(ஈ) அத்தகைய வட்டியினை, மேலே 5.1(ஆ) மற்றும் (இ)இல் குறிப்பிடப்பட்ட வட்டியையும் தற்போதுள்ள குத்தகை வசதி மீதான தவணைப் பணம் மற்றும் சட்ட இசைவுத்தாமதத்துடன் தொடர்பான பிற்போடப்பட்ட தவணைப் பணம் என்பனவற்றுடன் சேர்த்து, ஏற்புடைத்தானதொரு விதத்தில் பூரணமாகக் கொடுப்பனவு செய்ததன் பின்னர், உடனடியாக அறவிடுதல் வேண்டும்.

(உ) தற்போதுள்ள குத்தகை வசதியின் பிற்போடப்பட்ட காலம் உட்பட, எஞ்சியுள்ள காலம் முடிவடைந்ததும் கடன்பாட்டாளர்கள் மேலேயுள்ள பந்தி 5.2(ஆ) இல் குறிப்பிடப்பட்ட சட்ட இசைவுத்தாமதம் தொடர்பான பிற்போடப்பட்ட தவணைப் பணத்தின் மீள்கொடுப்பனவுகளைத் தொடங்குதல் வேண்டும்.

5.3 சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டியவை மற்றும் பிற்போடப்பட்ட காலப்பகுதிக்கான வட்டி என்பன உட்பட பிற்போடப்பட்ட காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டிய குத்தகை தவணைப் பணத்தினை உரிய காலத்திற்கு முன்னர் தீர்ப்பனவு செய்வதற்கு கடன்பாட்டாளர் எழுத்து மூலமான கோரிக்கையொன்றினை சமர்ப்பிப்பாராயின் உரிமம்பெற்ற வங்கிகள் அத்தகைய கோரிக்கைக்கு வசதியளிக்கலாம். அத்தகைய விடயத்தில் உரிமம்பெற்ற வங்கிகளும் கடன்பாட்டாளரும் சீரமைப்பு, வட்டி வீதம் மற்றும் காலம் தொடர்பில் உடன்பாடொன்றிற்கு வருதல் வேண்டும். வட்டி வீதம் தற்போதைய சந்தை வீதத்திற்கு நிகரான வீதத்தில் இருத்தல் வேண்டும்.

5.4 உரிமம்பெற்ற வங்கிகள், கடன்பாட்டாளரின் கோரிக்கையின் மீது கடன்பாட்டாளருக்கு வேறு ஏதேனும் தேர்வுகளை வழங்கலாம். எனினும், கடன்பாட்டாளருக்கான ஒட்டுமொத்த நன்மைகள் இச்சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்படுகின்ற நன்மைகளிலும் பார்க்கக் குறைவானதாக இருக்கக்கூடாது. அத்தகைய விடயத்தில், உரிமம்பெற்ற வங்கிகள் இச்சுற்றறிக்கையில் முன்மொழியப்பட்ட சீரமைப்பு உட்பட அனைத்துத் தேர்வுகளின் கீழுமான வட்டி வீதக் கணிப்புக்களை, அத்தகைய சலுகைகளுக்கு ஒப்புதலளிப்பதற்கு முன்னர் தெளிவாக விளக்குதல் வேண்டும்.

5.5 உரிமம்பெற்ற வங்கிகள் ஒன்றுசேர்ந்த தண்ட வட்டி வீதத்தினையும் 2021 ஏப்பிறல் 01 வரை செலுத்தப்படாதவை ஏதுமிருப்பின் அவற்றையும் தள்ளுபடி செய்தல் வேண்டும். பிற்போடப்பட்ட காலப்பகுதியில் தண்ட வட்டி வீதங்களை ஒன்றுசேர்க்கவோ விதிக்கவோ கூடாது.

5.6 சலுகைகளை வழங்குவது தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகள் மிகையான கட்டணங்களையோ விதிப்புக்களையோ மேற்கொள்ளக்கூடாது.

5.7 கோரிக்கைகளை நிராகரிப்பது தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகள் அத்தகைய நிராகரிப்பிற்கான காரணங்களைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

## 6. குத்தகை தவணைப் பணத்தினைப் பிற்போட்டமை தொடர்பான கணக்கீட்டுப் பரிசீலனைகள்

உரிமம்பெற்ற வங்கிகள் குத்தகை தவணைப் பணத்தினைப் பிற்போட்டமை தொடர்பான கணக்குகளை இலங்கை கணக்கீட்டு நியமங்களின் படியும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக நிதியியல் அறிக்கையிடல் சிக்கல்கள் தொடர்பில் இலங்கை கணக்கீட்டு நியமத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் மேலதிக வழிகாட்டிகளுக்கேற்பவும் பரிசீலித்தல் வேண்டும். இது தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு மேலதிக வழிகாட்டல்கள்/ தெளிவுபடுத்தல்கள் தேவைப்படுமிடத்து இலங்கை கணக்கீட்டு நியமங்களையும் கணக்காய்வாளர்களையும் நாடலாம்.

## 7. அறிக்கையிடும் தேவைப்பாடு

உரிமம்பெற்ற வங்கிகள் அவற்றின் கடன்பாட்டாளர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட குத்தகை தவணைப் பணத்தினைப் பிற்போட்டமை தொடர்பான விபரங்களை 2021 மே 01ஆம் நாளிலிருந்து ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு மாத்தின் 30ஆம் திகதியிலுள்ளவாறு 15 வேலைநாட்களுக்குள் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டுள்ள படிவத்தின்படி அறிக்கையிடுதல் வேண்டும்.

ஒப்பம்

**பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்**

நாணயச் சபையின் தலைவரும்

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

## பயணிகள் போக்குவரத்துத் துறையிலுள்ள வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களினால் பெறப்பட்ட குத்தகை வசதிகளுக்கான சலுகைகள் மீதான 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க சுற்றறிக்கை

### மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் கீழ் சலுகைகளைப் பயன்படுத்துகின்ற தகைமையுடைய கடன்பாட்டாளர் தொடர்பான அறிக்கை

வங்கியின் பெயர்:

................ இலுள்ளவாறு

பெறப்பட்ட கோரிக்கைகளின் மொத்த எண்ணிக்கை:

அனைத்துத் தொகைகளும் 000' இல்

| தொடர் இலக்கம் | குத்தகை தவணைப் பணத்தினைப் பிற்போடுவதற்காக கோரிக்கை விடுத்த தகைமையுடைய வியாபாரங்கள்/ தனிப்பட்டவர்களின் பெயர்கள் | குத்தகை தவணைப் பணத்தினைப் பிற்போடலுக்காகப் பரிசீலிக்கப்பட்ட கோரிக்கை | | | குத்தகை தவணைப் பணத்தினைப் பிற்போடுவதற்கான கோரிக்கையினை நிராகரிப்பதற்கான காரணங்கள் | பயணிகள் போக்குவரத்தின் வகை (தயவுசெய்து கீழே தரப்பட்டுள்ள பட்டியலிலிருந்து பொருத்தமான வகையினைத் தெரிவுசெய்யவும்) | 2021.04.01இல் உள்ளவாறு வெளிநின்ற மூலதனத் தொகை | ஒப்புதலளிக்கப்பட்ட பிற்போடல் காலம் (மாதங்களில்) | 2020.04.01இல் தொடங்கிய பிற்போடப்பட்ட காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டிய குத்தகை தவணைகளின் தொகை | பிற்போடப்பட்ட காலப்பகுதிக்காக 364 நாள்திறைசேரி உண்டியல் + 1% வட்டியில் ஒன்றுசேரவுள்ள வட்டி (தற்போதுள்ள வசதி) | | பிற்போடப்பட்ட காலப்பகுதிக்காக 364 நாள் திறைசேரி உண்டியல் + 1% வட்டியில் ஒன்றுசேரவுள்ள வட்டி (சட்ட இசைவுத்தாமதம்)* | | தற்போதுள்ள குத்தகைத் தவணைப் பணம் மற்றும் செலுத்தப்பட வேண்டிய சட்ட இசைவுத்தாமதம் என்பனவற்றின் மீள்கொடுப்பனவுகளின் ஆரம்பம்* | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆம் | இல்லை | நிலுவையிலுள்ளவை | | | | | | பிரயோகிக்கத்தக்க வட்டி வீதம் | ஒன்றுசேரவுள்ள வட்டித் தொகை | ஏற்புடைத்தான வட்டி வீதம் | ஒன்றுசேரவுள்ள வட்டித் தொகை | தற்போதுள்ள கடனின் மீள்கொடுப்பனவு தொடங்குவதற்கு இணங்கப்பட்ட திகதி | தற்போதுள்ள கடனின் மீள்கொடுப்பனவு தொடங்கும் உண்மைத் திகதி | சட்ட இசைவுத் தாமதத்தின் செலுத்தப்பட வேண்டிய தொகையின் மீள்கொடுப்பனவு தொடங்குவதற்கு இணங்கப்பட்ட திகதி* | சட்ட இசைவுத் தாமதத்தின் செலுத்தப்பட வேண்டிய தொகையின் மீள்கொடுப்பனவு தொடங்கும் உண்மைத் திகதி* |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |

- 2019 ஏப்பிறல் 01இலிருந்து 2020 மாச்சு 31, 2020 ஏப்பிறல் 01 இலிருந்து 2020 செத்தெம்பர் 30 வரை மற்றும் 2020 ஒத்தோபர் 01 இலிருந்து 2021 மாச்சு 31 வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்ட சட்ட இசைவுத்தாமதம்.

2021 மே 01 தொடக்கம் ஒவ்வொரு மாதமும் 30ஆம் திகதியிலுள்ளவாறான நிலைமையினை 15 வேலைநாட்களுக்குள் dbsd@cbsl.lk பிரதியுடன் bsd.db@cbsl.lk இற்கு மின்னஞ்சல் செய்யவும்.